**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051884

1. District மாவட்டம் : **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2022** FIR No.: மு.த.அ. எண் **07/2022** Date: நாள் **25.06.2022**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் **21.06.2022** — Date to : நாள் வரை **24.06.2022**
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் - — Time to : நேரம் வரை -
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **25.06.2022** Time நேரம் : **07.30 Hrs**
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - II** Time நேரம் : **08.30 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **75 Kms North west**
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி **Jamunamarathur, Tiruvannamalai District.**
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.P.Govindaraj** — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.Periyapaiyan**
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-29** — (d) Nationality : நாட்டினம் **Indian** — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் **Farmer** — (g) Address : முகவரி **Chindalur Village Jamunamarathur Taluk, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Tr.Vijay, Head Constable, Special Branch, Jamunamarathur Police Station, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: ------
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது. திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் 25.06.2022 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரார் திரு.P.கோவிந்தராஜ், த/பெ.பெரியபையன், ஜமுனாமரத்தூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் P.கோவிந்தராஜ், வயது 29, த/பெ. பெரியபையன், சிந்தாலூர் கிராமம் ஜமுனாமரத்தூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்நெம்பர்.7094538379 பெறுநர் உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா நான் சிந்தாலூர் கிராமத்தில் என் மனைவி காயத்திரி, மகள்கள் பிரதீபா, லத்திகாஸ்ரீ மற்றும் மகன் லட்சபிரசாத் ஆகியோருடன் வசித்து வருகிறேன். நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தந்தை பெரியபையன் மற்றும் தாயார் சரோஜா இருவரும் என்னுடன் வசித்து வருகிறார்கள். இருவரும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திலும் மீத நாட்கள் செங்கல் சூலையில் வேலை செய்வார்கள். எங்களுக்கு சொந்தமாக 3½ ஏக்கர் நிலம் சிந்தாலூர் கிராமத்தில் உள்ளது.

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P.கோவிந்தராஜ்
25/06/2022

[signature] 25.06.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.06.2022 at 09.00 hrs

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை DSP ……No. எண் ……
VSAC, TVM.

என் தம்பி ராமராஜ், சிவில் இன்ஜினியரிங் முடித்து சென்னையில் வேலை செய்கிறார். நான் அதிகம் படிக்காத காரணத்தினால், சிறுவயதிலிருந்தே கட்டிட வேலைக்கு செல்வேன். மேலும் நான் எங்களுடைய சொந்த நிலத்தில் செங்கல் சூளை வைத்து உள்ளேன். எனக்கு திருமணமாகி ஏழு வயதில் மகளும் மற்றும் இரட்டை பிறப்பாக ஒரு ஆண், ஒரு பெண் குழந்தைகளும் உள்ளனர். எனக்கு சொந்தமாக விவசாயத்திற்கு பயன்படுத்தும் டிராக்டர் உள்ளது. இதில் செங்கல் சூளைக்கு தேவையான எரிபொருளுக்கு மரக்கட்டைகள், மரங்கள், காய்ந்த விறகுகள் எடுத்து வருவது வழக்கமாகும். கடந்த 21.06.2022 மாலை நான் செங்கல் சூளையில் இருந்த போது ஜமுனாமரத்தூர் காவல் நிலைய தலைமை காவலர் CID விஜய் அவர்கள் வந்து, நீ என்ன தொழில் செய்கிறாய் என்று விசாரித்தார்கள். அதற்கு நான் கட்டிட வேலை மற்றும் சொந்தமாக செங்கல் சூளை வைத்து உள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அவர் டிராக்டரில் என்ன என்று கேட்டார். அதற்கு நான் விறகுகள் என்று சொன்னேன். அவர் நீ செய்ற வேலை எல்லாம் எனக்கு தெரியும், உன்ன எங்க அதிகாரிகளிடம் சொல்லி உள்ள தூக்கி போடாம இருக்க 1 லட்சம் ரூபாய் கொடு என்று கேட்டார். அதற்கு நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் செம்மர கட்டை கடத்துவதாக தகவல் வந்தது. அதற்கு மேல் நடவடிக்கை எடுத்து ஸ்டேசனில் உயர் அதிகாரிகளிடம் சொல்லி வழக்கு போடாமல் இருக்க 1 லட்சம் ரூபாய் கொடு என்று கேட்டார். அதற்கு நான் எந்த தவறான வேலையும் செய்யவில்லை நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியதற்கு அவர் ஆவேசமாக என்னை திட்டிவிட்டு, காவல் நிலையம் வந்து என்னை பார் என்று சொல்லி சென்று விட்டார். நானும் அன்று 21.06.2022 தேதி சாயங்காலமே காவல் நிலையம் சென்றேன் அப்போது காவல் நிலையத்தில் CID விஜய் அவர்கள் இருந்தார். என்னை பார்த்து பணம் எடுத்து வந்தாயா என்று கேட்டார் நான் அவரிடம் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அடிக்குற அடியில பொண்டாட்டிகூட குடும்பம் நடத்த முடியாத மாதிரி பண்ணிடுவேன் தெரியுமா என்று சொல்லி பணத்துடன் வா என்று என்னை அனுப்பிவிட்டார். மீண்டும் நான் மறுநாள் 22.06.2022- ந் தேதி புதன்கிழமை என் ஊரை சார்ந்த ஊர் கவுண்டர் அறிவழகனுடன் ஜமுனாமரத்தூர் காவல் நிலையம் சென்று CID விஜய் அவர்களை பார்க்க சென்றபோது அவர் அங்கு இல்லை. அவருக்கு என்னுடைய போனில் (7094538379) இருந்து அவருடைய தொலைபேசி எண் (9626757248) தொடர்பு கொண்டு நான் காவல் நிலையம் வந்திருப்பதாக சொன்னேன் அதற்கு அவர் நான் ஒரு பஞ்சனில் இருக்கிறேன். நீ போய் பஸ் நிலையத்தில் இருக்குமாறு சொன்னார் அவரும் சுமார் இரவு 8.45 மணிக்கு மேல் வந்தார். பணம் கொண்டு வந்தாயா என்று கேட்டார். அதற்கு நான் இல்லை என்று சொன்னேன். என்னால் இவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று அவரிடம் கெஞ்சினேன். அதற்கு அவர் 30,000

ரூபாயாவது கடைசியாக கொடு என்று சொன்னார். நான் இதுவும் முடியாது என்று சொன்னேன். அவர் கடைசியாக ரூபாய் 15,000/- கொடுக்க வேண்டும் என்று கண்டிப்புடன் சொன்னார் அதையும் நான் நாளை 23.06.2022-ம் தேதி திருவண்ணாமலை எஸ்.பி ஆபீஸ் டூட்டி உள்ளதால், டூட்டி முடித்து 24.06.2022 வெள்ளிக்கிழமை மதியத்திற்கு மேல் ஜமுனாமுத்தூர் காவல் நிலையம் வருவேன் வந்த உடன் பணத்துடன் என்னை வந்து பார் என்று கண்டிப்பாக சொல்லி விட்டு கிளம்பிவிட்டார். என்னால் அவ்வளவு தொகை உடனடியாக தயார் செய்ய முடியாததால், இன்று பணத்தை தயார் செய்தேன். மேலும் என் மீது பொய் வழக்கு போடுகிறேன் என்று மிரட்டி ரூபாய் 15,000/- இலஞ்சமாக கேட்ட ஜமுனாமுத்தூர் காவல் நிலைய தலைமை காவலர் CID விஜய் என்பவருக்கு இலஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால் தெரிந்த நபர் மூலம் புகார் மனு தயார் செய்து கொண்டு இன்று 25.06.2022-ம் தேதி காலை 07.30 மணிக்கு திருவண்ணாமலை லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு வந்து புகார் மனு அளிக்கிறேன். மேலும் இலஞ்சம் கேட்ட திரு. விஜய் CID என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (Sd XXXXX) P.கோவிந்தராஜ் **25/06/2022**

Sir,

Received the complaint on 25.06.2022 at 07.30 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 25.06.2022 at 08.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.07/2022, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 25/06/2022. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai.

25.06.2022
(S. VELMURUGAN)
DSP V&AC
TVM